**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 148/2021**
**நாள் 01/06/2026 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 2–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – பிரேம்குமார் (DW2) | த/பெயர் – |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

1. நான் 2013 ம் ஆண்டில் இருந்து லட்சி பவானி இன்ஜினியரின் ஒர்க்ஸ் என்னுடன் சேர்த்து 5 பேர் வேலைபார்த்து வந்தார்கள் என சொல்லியுள்ளேன் என்றும் எங்களை PF – ல் உறுப்பினராக சேர்த்துள்ளாரா என்றால் சேர்த்துள்ளார். மாதசம்பளம் எங்களுக்கு எவ்வாறு வழங்கப்படுகிறது என்றால் ரொக்கமாக கொடுக்கப்பட்டு வௌச்சரில் கையொப்பம் பெறப்படுகிறது. எங்களுக்கு பணி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் பிரதிவாதி நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பணி நேரம் என்னவென்றால் காலை 06.00 மணி முதல் மாலை 05.00 மணிவரை ஆகும்.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி, ஏழுமலை மற்றும் முனுசாமி ஆகியோர்களிடம் குத்தகை ஒப்பந்தம் போட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும் அது என்னிடம் காண்பித்தனாரா என்றால் இல்லை.

ஏழுமலை மற்றும் முனுசாமியின் அனுமதியின் பெயரில் பிரதிவாதி பழனி செட் கட்டியுள்ளார் என்ற விவரம் எனக்கு பிரதிவாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். வாதி 2019ம் ஆண்டு வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும் 28.12.2019 தேதியன்று வாதி பிரதிவாதிக்கு எதிராக கவரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. 02.11.2020 தேதியன்று வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பற்றி பிரதிவாதி என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. நான் பிரதிவாதி நிறுவனத்தில் 2013 முதல் உண்மையில் வேலை பார்த்திருந்தால் மேற்படி விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியவந்திருக்கும் என்றும் அங்கு வேலை செய்யாததால் தான் மேற்படி விவரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்தில் நான் வேலை பார்க்கிறேன் என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில், பிரதிவாதிக்கு அனுசரனையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**